# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.379/2023 | Date | : 27.03.2026 |
| Deposition of Witness for | : அ.சா.6 | Taluk | : |
| Name | : திரு.செல்வராஜ் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.03.2026.

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.சுதாகரன், என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்டதால், அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26-03-2023 ம் தேதி, சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக திரு.சண்முககுமார், அவர்கள் பணிபுரிந்தபோது, முன்னதாக ஈரோடு பிரீத்தி மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற RTA தகவலின் பேரில் அங்கு சென்று பார்த்தபோது காயம்பட்ட தேவேந்திரன், என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் உடன் இருந்த அவரது மனைவி யசோதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின்பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.128/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச-ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையை, வாதியின் புகார்

வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து, இவ்வழக்கை மேல்விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு.சுதாகரன், அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

2) பின்னர், அன்றைய தினமே, பிற்பகல் சுமார் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கார்த்திக் மற்றும் கௌதம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றுள்ளார் (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவயிட சாட்சிகள் செந்தில்குமார், வெங்கட்ராமன் மற்றும் விபத்தில் காயமடைந்த தேவேந்திரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி ஜெகநாதன், த/பெ.கந்தசாமி, என்பவர் TN 54 U 0876 என்ற பதிவு எண் கொண்ட Renault Triber காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து எதிரி ஜெகநாதன், த/பெ.கந்தசாமி, என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 05.04.2023 ஆம் தேதி, மாலை சுமார் 04.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

4) பின்னர், கடந்த 05-04-2023 ம் தேதி, இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 54 U 0876 என்ற பதிவு எண் கொண்ட Renault Triber கார் மற்றும் TN 36 AH

6314 என்ற பதிவு எண் கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தையும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கைகளை பெற்றுள்ளார். (**TN 54 U 0876 என்ற பதிவு எண் கொண்ட Renault Triber கார் மற்றும் TN 36 AH 6314 என்ற பதிவு எண் கொண்ட TVS XL இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், விபத்தில் காயமடைந்த தேவேந்திரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த கோவை ராயல் கேர் மருத்துவமனை மருத்துவர் திரு.ஜெயசிங், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். (**விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

6) பின்னர், பெரியசாமி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் காயச்சான்று வழங்கியதால் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 338 இதச-பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 338 இதச- ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை** :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Selvaraj